**19.02.2026**

அ.வ.எண். **90/2022**

<u>வா.சா.1 கிருஷ்ணதாஸ் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தாவாசொத்து ஆதியில் வேதவள்ளியம்மாள் பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்தது என்றால் சரிதான். எனது பாட்டி கிருஷ்ணவேணியம்மாள் மற்றும் தாத்தா வெங்கடகிருஷ்ண ரெட்டியார் மற்றும் எனது தகப்பனார் ராமதாஸ் ரெட்டியார் பெயரில் பட்டா எந்த காலத்திலும் இருந்தது இல்லை என்றால் எனது அப்பா பெயர் இருந்தது. எந்த பசலி ஆண்டில் எனது அப்பா பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு எனது அப்பா பெயரில் பட்டா இருந்தது என்றால் எனக்கு தெரியாது. வழக்கின் பிராது மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் எனது அப்பா ராமதாஸ் ரெட்டியார் பெயரில் தாவாசொத்தின் பட்டா இருந்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. வேதவள்ளியம்மாளின் ஒரே வாரிசு மனோரஞ்சிதம்மாள் என்றால் சரிதான். மனோரஞ்சிதம்மாளுக்கு நேரடி வாரிசு இல்லை என்றால் சரிதான். கிருஷ்ணவேணியம்மாள் மகள் தாட்சியாயினி அம்மாள் என்றால் சரிதான். தாட்சாயினி அம்மாள் மகள் ரேவதி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மனோரஞ்சிதம்மாள் எழுதி கொடுத்த உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில் எங்கள் தரப்பு மனுவில் தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தற்போது தெரியும். மேற்சொன்ன உயில் ஆவணத்தை நீதிமன்றத்தில்

தாக்கல் செய்த பிறகு நான் நீதிமன்றத்தில் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் தற்போது தான் தெரியும், அதனால் செய்யவில்லை. 2ம் பிரதிவாதி தனது பதிலுரையில் மனோரஞ்சிதம்மாள் தனக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்ற விவரத்தை கூறியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

3. தாவாசொத்தை மடத்து மனை என்றுதான் வழக்காடி வருகிறேன் என்றால் சரிதான். ஆனால் வருவாய் ஆவணங்கள் அனைத்திலும் தாவாசொத்து களத்து மேட்டு மனை என்றுள்ளது என்றால் சரிதான். மடத்துமனை என்பதற்கு என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் தாவாசொத்து வேதவள்ளியம்மாள் பெயரில்தான் பதிவாகியுள்ளது என்றால் சரிதான், மொத்த சொத்தும் பதிவாகியுள்ளது. மனோரஞ்சிதம்மாள் 30.10.1990 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். மனோரஞ்சிதம்மாளின் தாயார் வேதவள்ளியம்மாள் 21.06.1981 அன்று காலமாகிவிட்டார் என்றால் சரிதான்.

4. தாவாசொத்திற்கு தற்போது 2ம் பிரதிவாதி ரேவதி பெயரில்தான் பட்டா தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். எவ்வளவு காலமாக தாவாசொத்திற்கு 2ம் பிரதிவாதி ரேவதி பெயரில் பட்டா இருந்தது என்றால் எனக்கு 2020ம் வருடம்தான் தெரியவந்தது. தாவாசொத்திற்கு 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா இருந்தது தெரிந்து வருவாய் துறையில் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் ஆட்சேபணை செய்துள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி தாவா சர்வெ எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் கொடுத்தார் என்றால்

எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதில் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் 13 செண்ட் நிலம் ஆகும். அந்த கிரைய ஆவணத்தில் உள்ள நான்கு மால்கள் தெரியுமா என்றால் தெரியும், ஆனால் அது தவறான ஜக்குபந்தி ஆகும்.

5. வடக்கில் உள்ள மால் தவறானது, தெற்கில் குணசேகரன் சொத்து சரி, கிழக்கில் ஜெயசங்கர் சொத்து என்றால் சரிதான், மேற்கில் ரோடு என்றால் சரிதான். 13 செண்ட் நிலத்திற்கு வடக்கில் உள்ள இடம் எனது சொத்தாகும். அந்த இடம் என்னுடைய இடம் என்று காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இருக்கிறது. நான் தாக்கல் செய்த ஆவணங்களில் வடக்கு பக்கம் உள்ள சொத்து எனது சொத்து என்று எந்த ஆவணத்திலும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய ஜக்குபந்தியும் நான் தாவாசொத்தில் காட்டியுள்ள ஜக்குபந்தியும் வேறு வேறு என்றால் எனது ஜக்குபந்திதான் உண்மையானது, 1ம் பிரதிவாதி கிரைய ஆவணத்தில் உள்ள ஜக்குபந்தி சரியானது கிடையாது.

6. எனது பிராதில் உள்ள ஜக்குபந்தி பழைய ஆவணங்கள் அடிப்படையில் உள்ள நான்கு மால்கள் ஆகும், தற்போது நடைமுறையில் வேறு ஜக்குபந்தி உள்ளது என்றால் சரியல்ல. தாவாசொத்தின் வடக்கு மால், தெற்குமால், கிழக்கு மால் மற்றும் மேற்கு மால் நடைமுறையில் இல்லை என்றால் சரியல்ல. எனது பிராதில் 36 செண்டில் 10 செண்டிற்குதான் நான்

வழக்கு தாக்கல் செயதுள்ளேன் அதனால் மீதி உள்ள இடம் நான்கு மாலில் ஏதாவாது ஒரு பக்கம் வர வேண்டும் என்றால் வடக்கு பக்கம் வருகிறது. அதனால் எனது வழக்கில் வடக்கு மாலில் மிகுதி இடம் என்று சொல்லாமல் வெறும் களத்து மேட்டு மனை என்று கூறியுள்ளது தவறுதான் என்றால் சரியல்ல.

7. எனது வழக்குபடி 10 செண்டிற்கு மிகுதியான இடம் நான் உரிமை கோரவில்லை என்றால் சரிதான். வடக்கு பக்கம் உள்ள மிகுதி இடம் எனது இடம் இல்லை என்றால் சரிதான், அது வேதவள்ளியம்மாளின் சொத்தாகும். அந்த சொத்தில் எனக்கு உரிமையும் பாத்தியமும் கிடையாது என்றால் சரிதான். எனது பிராது மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் கிருஷ்ணவேணியம்மாளுக்கு தாவாசொத்து ஆதியில் எப்படி கிடைத்தது என்று நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன், கூர்சீட்டு அடிப்படையில் கிருஷ்ணவேணியம்மாளுக்கு கிடைத்தது. கூர்சீட்டு ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

8. இன்றைய தேதி வரையில் கிருஷ்ணவேணியம்மாளுக்கு எப்படி உரிமை வந்தது என்று எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், என்னிடம் உள்ளது நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். தாவாசர்வே எண்ணில் எந்த விஸ்தீரணமும் கிருஷ்ணவேணியம்மாளுக்கு எந்த காலத்திலும் உரிமையும் பாத்தியமும் ஏற்பட்டது இல்லை என்றால் சரியல்ல. அப்படி உரிமை

இல்லாத சொத்தை கிருஷ்ணவேணியம்மாள் தனது மகன் ராமதாஸ்க்கு செட்டில்மெண்ட் எழுதி தர உரிமையில்லை என்றால் சரியல்ல. 03.10.1957 தேதியிலிருந்து ராமதாஸ் காலம் வரை செட்டில்மெண்டடில் கண்டுள்ள விஸ்தீரணத்தில் அவர் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான், ஆனால் எனது அப்பா அனுபவித்து வந்தார். எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 2006ம் வருடம் இருக்கும்.

9. எனது அப்பாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் நானும் எனது தாயாரும் வாரிசுகள் ஆவோம். எனது அம்மா 2015 அல்லது 2017ம் வருடம் இறந்துவிட்டார். எனது அப்பா இறந்தபிறகு தாவா சொத்துகுரிய சர்வே எண்ணிற்கு எனது பெயரிலோ அல்லது எனது அம்மா பெயரிலோ பட்டா மாறியதா என்றால் இல்லை. எனவே நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் எந்த காலத்திலும் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள ஐக்குபந்தியை தான் எனது பிராதின் ஐக்குபந்தியாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் உள்ள ஐக்குபந்தி தாவாசொத்திற்கு சம்பந்தமில்லாத ஐக்குபந்தி என்றால் சரியல்ல.

10. தாவாசர்வெ எண்ணிற்கும் அதில் உள்ள ஐக்குபந்திக்கு சம்பந்தமில்லாத ஐக்குபந்தி என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு உரிமையான சொத்தைதான் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு மாட்டு கொட்டகை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல, அது என்னுடைய மாட்டு கொட்டகை ஆகும். எனது பிராதில் தாவாசொத்தில் மாட்டு கொட்டகை

காட்டியுள்ளேனா என்றால் இல்லை, நான் வீடு என்றுதான் காட்டியுள்ளேன். ஆனால் தாவாசொத்தில் குடியிருக்கும் வீடு இல்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன வீட்டில் மின் இணைப்பு உள்ளதா என்றால் வேறு ஒருவர் வீட்டிலிருந்து மின் இணைப்பு பெற்றுள்ளேன். அவரின் பெயர் எனக்கு தெரியாது. அவர் எனக்கு உறவுமுறையா என்றால் ஊர்காரர் மற்றும் எங்கள் இனத்தை சேர்ந்தவர், அவரின் மனைவி பெயர் தெரியாது, மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. மின் கட்டணம் செலுத்துகிறேனா என்றால் மின் கட்டணம் வராது.

11. தாவாசொத்தை வழக்கறிஞர் ஆணையர் பார்வையிட்டால் வீடு உள்ளதா, மாட்டுகொட்டகை உள்ளதா, மின் இணைப்பு உள்ளதா என்று தெரிய வரும் என்றால் சரிதான். எவ்வளவு காலமாக அந்த வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் கடந்த 10 வருடமாக குடியிருந்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீட்டின் தெரு பெயர் தர்மராஜா தெரு ஆகும். அதற்கு முன்பு பிள்ளையார் கோவில் தெருவாக இருந்தது. தாவாசொத்தில் மாட்டு கொட்டகைதான் உள்ளது அது 1ம் பிரதிவாதி அனுபவத்திலும் சுவாதீனத்திலும் உள்ளது என்றால் சரியல்ல. அந்த மாட்டு கொட்டகைதான் 1ம் பிரதிவாதி வரி செலுத்தி வருகிறார் என்றால் எனக்குதெரியாது. எனவே தாவாசொத்தில் எனக்கு உரிமையும் பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. எனவே வழக்கை அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.